Nestlé Good food, Good life

# பத்திரிகை செய்தி

கொழும்பு, ஜூலை 11, 2022

## நெஸ்லே லங்கா மற்றும் பெரேரா அன்ட் சன்ஸ் பேக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஆகியவை இலங்கையில் பிளாஸ்திக் மாசுபாட்டைச் சமாளிக்க உதவுவதற்காக ஒன்றிணைந்து செயல்படுகின்றன

நெஸ்லே லங்கா மற்றும் பெரேரா அன்ட் சன்ஸ் பேக்கர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவை இலங்கையில் பிளாஸ்திக் மாசுபாட்டை சமாளிக்க உதவுவதற்காக கைகோர்த்துள்ளன. இதன்படி உள்நாட்டிலுள்ள பேக்கரி சங்கிலியின் விற்பனை நிலையங்களில் நுகரப்படும் தயாரிப்புகள் பொதி செய்யப்படுகின்ற பொருட்களை சேகரித்து மீள்சுழற்சி செய்வதன் மூலம் இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது. இரண்டு நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம், மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களுக்கு தனித்தனி கழிவுத்தொட்டிகளை ஏற்பாடு செய்வதன் மூலமும், பொறுப்புணர்வுடன் கழிவகற்றலை ஊக்குவிப்பதன் மூலமும் கழிவுகளை தரம் பிரிப்பதற்கு வசதியாக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. சேகரிக்கப்பட்ட கழிவுகள் அதன் பின்னர் ராஜகிரியவில் உள்ள பெரேரா அன்ட் சன்ஸ் மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் சேகரிப்பு மையத்திற்கு அனுப்பப்படுகின்றன. அங்கு அவை சுத்தம் செய்யப்பட்டு, அமுக்கப்பட்டு, உள்நாட்டு மீள்சுழற்சி நிறுவனங்களான Eco-Maximus மற்றும் Eco-Spindles ஆகியவற்றிற்கு கொண்டு செல்லப்படும் வரை வைத்துப் பேணப்படுகின்றன. தற்சமயம் 100 க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், நெஸ்லே லங்கா மற்றும் பெரேரா அன்ட் சன்ஸ் ஆகியவை இந்த முயற்சியை எதிர்வரும் ஆண்டுகளில் நாடளாவிய ரீதியில் பெரேரா அன்ட் சன்ஸ் விற்பனை நிலையங்களுக்கு விரிவுபடுத்த எண்ணியுள்ளன.

இந்த நற்காரியத்துக்கான ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, பெரேரா அன்ட் சன்ஸ் மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் சேகரிப்பு மையத்தில் ஒரு சிப்பமாக்கல் இயந்திரத்தை (baling machine) நிறுவ நெஸ்லே லங்கா உதவியுள்ளது. இந்த சிப்பமாக்கல் இயந்திரம், உள்நாட்டில் பேக்கரி சங்கிலியின் சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி முயற்சிகளை வலுப்படுத்த உதவுகிறது. அத்துடன், கழிவுகளை அமுக்கி மேலும் தொடர்ந்து பதப்படுத்தி மற்றும் மீள்சுழற்சி செய்வதற்கு அவற்றின் போக்குவரத்தை எளிதாக்குகிறது.

"இலங்கையில் வீட்டுக்கு வெளியில் நுகரப்படும் உணவு மற்றும் பான வகை வணிகத்தில் மிகப்பெரிய செயல்பாட்டாளர்களில் ஒன்றான Nestlé Professional, பூமிக்கு நல்லதைச் செய்யும் எங்கள் பயணத்தில், மிகப்பெரிய உள்நாட்டு பேக்கரி சங்கிலியுடன் கைகோர்ப்பதை பெரும் பாக்கியமாகக் கருதுகிறது. இந்த ஒத்துழைப்பு பொறுப்புணர்வுடன் கழிவுகளை அகற்றுவதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்படி நாம் பெரேரா அன்ட் சன்ஸ் உடன் இணைந்து மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை அவர்களின் விற்பனை நிலையங்களில் சேகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இது இலங்கையின் கழிவுகள் அற்ற எதிர்காலத்தை உறுதிசெய்வதற்கான எமது இலட்சியத்தை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்," என Nestlé Professional இன் துணைத் தலைமை அதிகாரியான ரொஷான் பெரேரா அவர்கள் குறிப்பிட்டார்.

பெரேரா அன்ட் சன்ஸ் பேக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரம் கொண்ட பணிப்பாளரான திரு. கமல் ஜெய்மோன் அவர்கள் இந்த ஒத்துழைப்பு குறித்து தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கையில், "உள்நாட்டு பேக்கரிச் சங்கிலியாக, இலங்கையில் பிளாஸ்திக் மாசுபாட்டைக் கையாள்வதில் எங்களது பங்களிப்பை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எம்மைப் போன்ற பேக்கரிகள் கணிசமான அளவு பொதியிடல் கழிவுகளைத் தோற்றுவிக்கின்றன, அவற்றைச் சேகரித்து மீள்சுழற்சி செய்வதற்கான வாய்ப்பை இது எங்களுக்கு வழங்குகிறது. நுகர்வுக்குப் பிறகு, மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை அந்தந்த கழிவுத்தொட்டியில் இட்டு, அவற்றுக்கு இரண்டாவது பாவனை வாழ்க்கையை வழங்க உதவுவதன் மூலம், இந்த நிலைபேற்றியல் பயணத்தின் ஒரு பகுதியாக இருக்குமாறு எங்கள் வாடிக்கையாளர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்!," என்று குறிப்பிட்டார்.

தூய்மையான மற்றும் பசுமையான தேசத்திற்காக பாடுபடும் 'நல்லுணவு, நல்வாழ்வு' நிறுவனம், இலங்கையில் தனது பிளாஸ்திக் அடிச்சுவட்டைக் குறைக்க பல்வேறு முயற்சிகளில் தீவிரமாக

செயல்பட்டு வருகிறது. இந்த முயற்சிகள் குறித்து நெஸ்லே லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜேசன் அவன்செனியா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், “நெஸ்லே நிறுவனத்தில் பிளாஸ்திக் மாசுபாட்டைக் கையாள்வது எங்களின் அவசர முன்னுரிமையாக காணப்படுகின்றது. எமது பொதியிடல் பொருட்கள் எதுவும் நிலப்பரப்பு அல்லது சமுத்திரங்களைச் சென்றடையாமல் இருப்பதை உறுதிசெய்ய பல்வேறு பங்குதாரர்களுடன் இணைந்து செயல்பட்டு வருகிறோம். எடையின் அடிப்படையில் எங்களின் 80% அளவிலான பொதியிடல் தற்போது மீள்சுழற்சி செய்யக்கூடியதாக இருப்பதுடன், 2025 ஆம் ஆண்டளவில் எங்கள் பொதியிடலை 100% மீள்சுழற்சி செய்யக்கூடியதாகவோ அல்லது மீண்டும் பயன்படுத்தக்கூடியதாகவோ மாற்ற நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். மேலும், நாட்டில் சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி உள்கட்டமைப்பை வலுப்படுத்த உதவுவதற்கும் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்ற அதே நேரத்தில் எங்கள் நுகர்வோரின் நேர்மறையான நடத்தை மாற்றத்தை ஊக்குவிக்க உதவி வருகிறோம். பெரேரா அன்ட் சன்ஸ் உடனான இந்த ஒத்துழைப்பு இலங்கையை மேலும் நிலைபேற்றியல் கொண்டதாக மாற்றுவதற்கான நமது முயற்சிகளை விரைவுபடுத்த உதவும் என்று நான் திடமாக நம்புகிறேன்,'' என்று குறிப்பிட்டார்.

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாகத் திகழ்ந்து வருகிறது. “அனைவருக்கும், இன்றும், எதிர்வரும் தலைமுறைகளுக்கும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உணவின் ஆற்றலை வெளிக்கொணர்டு வருதல்'' என்ற அதன் நோக்கத்தால் உந்தப்பட்டு, தனது பலதரப்பட்ட உணவு மற்றும் பான உற்பத்தி வகைகள் மூலம் இளமை முதல் முதுமை வரை தலைமுறை தலைமுறையாக நுகர்வோருக்கு நெஸ்லே சேவையாற்றி வருகிறது. இலங்கையில் விற்பனை செய்யப்படுகின்ற அதன் தயாரிப்புகளில் 90 க்கும் மேற்பட்டவற்றை குருநாகலிலுள்ள அதன் அதிநவீன தொழிற்சாலையில் உற்பத்தி செய்து வருவதுடன், நெஸ்லே உலகெங்கிலும் புகழ்பெற்ற உயர் தராதரத்தைக் கட்டிக்காத்து வருகிறது.

---


**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |